# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் : 09 | சைவநெறி | நேரம் : 2.00 மணி |
| --- | --- | --- |
| | சுட்டெண் ................................................ | |

## பகுதி - I

♦ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) "இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றியவர்
1. பிள்ளையார் 2. முருகன் 3. சிவபெருமான் 4. திருமால்

02) மகாபாரதத்தில் வரும் தருமனிடம் மேலோங்கியிருந்த விழுமியப்பண்பு
1. சகிப்புத்தன்மை 2. அமைதி 3. மனிதநேயம் 4. புரிந்துணர்வு

03) இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றிய நாள்
1. நவராத்திரி 2. திருக்கார்த்திகை 3. சிவராத்திரி 4. மாசிமகம்

04) 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" எனக் கூறியவர்
1. சம்பந்தர் 2. திருமூலர் 3. அருணகிரிநாதர் 4. மெய்கண்டார்

05) 'வரிவளைக் கைமட மானி" என அழைக்கப் பெற்ற பெண் அடியார்
1. மங்கையற்கரசியார் 2. திலகவதியார்
3. காரைக்காலம்மையார் 4. இசைஞானியார்

06) தோழமை நெறியில் இறைவனை வழிபட்ட நாயனார்.
1. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் 2. மாணிக்கவாசக சுவாமிகள்
3. திருநாவுக்கரசுசுவாமிகள் 4. சுந்தரமூர்த்திநாயனார்

07) கதிர்காம ஆலயத்தின் தீர்த்தமாக அமைவது
1. மாயவன் ஆறு 2. பாவநாசம் 3. மாணிக்ககங்கை 4. பாலாவி

08) மொழிக்குத் துணையாக அமைவது
1. மென்மலர்ப்பாதங்கள் 2. முருகா எனும் நாமம்
3. பன்னிரு தோள்கள் 4. செங்கோடன் மயூரம்

09) நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தவர்
1. நாயன்மார்கள் 2. நம்பியாண்டார் நம்பி
3. நாதமுனிகள் 4. திருமங்கையாழ்வார்

10) குலசேகர ஆழ்வார் உதித்த குலம்
1. சோழர்குலம் 2. சேரர்குலம் 3. பாண்டியர்குலம் 4. பிராமணர் குலம்

11) திருப்பள்ளியெழுச்சி பாடிய வைணவ சைவப்பெரியார்கள்
1. பெரியாழ்வார், சம்பந்தர்
2. ஆண்டாள், மாணிக்கவாசக சுவாமிகள்
3. தொண்டரடிப்பொடியாழ்வார், மாணிக்கவாசக சுவாமிகள்
4. தொண்டரடிப்பொடியாழ்வார், சம்பந்தர்

12) உத்தராயண காலத்தின் தொடக்கத்திலே கொண்டாடப்படும் பண்டிகை
1. தீபாவளி 2. தைப்பொங்கல் 3. சித்திரை வருடப் பிறப்பு 4. ஆடிப்பிறப்பு

13) யாழ்ப்பாணம் வண்ணை வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் தலவிருட்சம்
1. மாமரம் 2. விளாமரம் 3. பலாமரம் 4. வில்வமரம்

14) அன்னதானக் கந்தன் எழுந்தருளியுள்ள இடம்
1. மாவிட்டபுரம் 2. செல்வச்சந்நிதி 3. நல்லூர் 4. கதிர்காமம்

15) இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என சோழர்காலத்தில் அழைக்கப்பட்டது.
1. பிராமணர் குடியிருந்த இடம் 2. மக்கள் குடியிருந்த இடம்
3. நடன மாதர் குடியிருந்த இடம் 4. பரிபாலனம் செல்வோர் குடியிருந்த இடம்

16) சகசமலம் எனப்படுவது
1. கன்மம் 2. மாயை 3. ஆணவம் 4. பசு

17) பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு இறைவனை அடைதல்
1. மகிழ்ச்சி 2. முத்தி 3. தீட்சை 4. சாலோகம்

18) மட்டக்களப்பு நகரில் சைவசமய எழுச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்
1. ஆறுமுகநாவலர் 2. அருணாசல தேசிகர்
3. சேர் பொன் இராமநாதன் 4. இந்து போட் சு.இராசரத்தினம்

19) ஐயனார் வழிபாட்டிலே மகர ஜோதி தரிசனம் சிறப்பாக இடம்பெறுவது
1. தாந்தாமலை 2. சிவனொளிபாதமலை 3. திருப்பதி ஏழுமலை 4. சபரி மலை

20) பஞ்சபுராணத்தில் மூன்றாவதாக ஓதுவது
1. தேவாரம் 2. திருவிசைப்பா 3. திருவாசகம் 4. பெரியபுராணம்

20x2 = 40 புள்ளிகள்

## பகுதி - II

♦ **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
1. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று கூறியவர் யார்?
2. பாண்டிய நாட்டில் சைவசமயம் நலிவுற்றமைக்கான காரணம் யாது?
3. கதிர்காமத்திற்குப் பாத யாத்திரை மேற்கொண்ட ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
4. நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கருதிப்பாடல்கள் பாடிய ஆழ்வார் யார்?
5. கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கப்படும் காலம் எது?
6. மார்கழித்திருவாதிரை சிறப்பாக நடைபெறும் ஈழத்துச் சிவாலயம் எது?
7. தமிழ் ஆகமம் எனப் போற்றப்படும் நூல் எது?
8. திருப்புகழ் பாட அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் எடுத்துக் கொடுத்த அடி யாது?
9. முக்குணங்களும் எவை?
10. திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர்திருவந்தாதி என்ற நூல்களை அருளியோர் யாவர்?

(10x2 = 20 புள்ளிகள்)

02) பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை
1. அடிமுறை பிழையாது எழுதுக
2. பாடியவர் பெயர், தலம் என்பவற்றைத் தருக?

அ) "ஏழிசையாய் இசைப்பயனாய்....."
ஆ) "இல்லக விளக்கது......"
இ) "நையாத மனத்தினனை...."
ஈ) "சொல்லாண்ட சுருதிப் பொருள்...."
உ) "ஐந்து பேரறிவும்...."

(6+1+1 = 8x2 = 16 புள்ளிகள்)

03) "இல்லறமே நல்லறம்"
1. இல்லறத்தானுக்குரிய கடமைகளில் ஒன்றைத் தருக?
2. சம்பந்தரும் அப்பரும் இணைந்து புரிந்த விருந்தோம்பல் யாது?
3. விருந்தோம்பல் பற்றி வள்ளுவர் கூறும் குறட்பா ஒன்றைத் தருக?
4. ஆலயங்களில் இடம்பெறும் விருந்தோம்பலுடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்குக?

(1+2+3+2 = 8 புள்ளிகள்)

04) "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்"

1. இந்த உடம்பு நமக்குக் கிடைத்தமைக்கான காரணம் யாது?
2. திரிகரணங்களும் எவை?
3. உயிர்கள் மீது இரக்கம் காட்டிய இரு மன்னர்களின் பெயர்களைத் தருக
4. அகத்தூய்மையை எவ்வாறு வளர்க்கலாம் என விளக்குக?

(1+ 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

05) 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"

1. சைவசமயத்தின் பொது நூல்கள், சிறப்பு நூல்கள் எவை?
2. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருட்களும் எவை?
3. கன்மம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
4. ஆணவமலத்தின் இயல்புகளை விளக்குக?

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

06) "விரதங்களும் பண்டிகைகளும் மனித வாழ்வை மேம்படுத்துகின்றன"

1. விரதமாவது யாது?
2. விரதங்கள் எதன் அடிப்படையில் வகுக்கப்படுகின்றது?
3. சைவர்கள் கொண்டாடும் பண்டிகைகள் மூன்று தருக?
4. சிவன், திருமால், அம்பிகை ஆகியோருக்குரிய சிறப்பான நட்சத்திரங்கள் எவை?

(2 + 2 + 2 + 2 = 8 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் இரண்டைப்பற்றி சிறு குறிப்பு எழுதுக?

1. சைவநாற்பாதங்கள்
2. பொன்னம்பலவாணேச்சரம்
3. தலைமைத்துவம்
4. பஞ்சாங்கம்
5. மங்கையற்கரசியார்

(4 + 4 = 8 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

**சைவநெறி** **தரம் : 09**

**புள்ளித்திட்டம்**

**பகுதி - I**

| | | | |
|---|---|---|---|
| *01) 3* | *02) 1* | *03) 3* | *04) 2* |
| *05) 1* | *06) 4* | *07) 3* | *08) 2* |
| *09) 3* | *10) 2* | *11) 3* | *12) 2* |
| *13) 3* | *14) 2* | *15) 1* | *16) 3* |
| *17) 2* | *18) 2* | *19) 4* | *20) 2* |

**பகுதி - II**

*01)* 1. சுவாமி விபுலானந்தர்
2. மன்னன் பாண்டியன் நெடுமாறன் சமண சமயத்தைத் தழுவியமை அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி.
3. யோகர் சுவாமிகள், காரைதீவு சித்தானைக்குட்டிசுவாமிகள்
4. மதுரகவி ஆழ்வார்
5. புரட்டாதி மாத வளர்பிறை நவமி முதல் ஐப்பசி மாதத்து அமாவாசை வரை இருபத்தொரு நாட்கள்
6. காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்
7. திருமூலரது திருமந்திரம்
8. 'முத்தைத் தரு பத்திதிருநகை..."
9. தாமசம், இராஜசம், சாத்வீகம்
10. திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி.
திருத்தொண்டர் தொகை - சுந்தரர். (10x2 = 20 புள்ளிகள்)

*02)* அ) "ஏழிசையாய் இசைப்பயனாய்..."
பாடியவர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்
பாடியதலம் - திருவாரூர்
ஆ) இல்லகவிளக்கது....
பாடியவர் - திருநாவுக்கரசு சுவாமிகள்
பாடியதலம் - பொது
இ) "நையாத மனத்தினனை...."
பாடியவர் - கருவூர்த் தேவர்
பாடியதலம் - திரைலோக்கிய சுந்தரம்
ஈ) சொல்லாண்டசுருதிப் பொருள்
பாடியவர் - சேந்தனார்
தலம் - தில்லை / சிதம்பரம் / கோயில்
உ) ஐந்து பேரறிவும்
பாடியவர் - சேக்கிழார்
தலம் -
(சுந்தரர் தில்லை தரிசனத்தால் பெற்ற அனுபவத்தைச் சேக்கிழார் கூறுகின்றார்)
பாடல் 6 + 6 பாடியவர் பெயர் - 01 + 01
தலம் - 01 + 01
(8x2 = 16 புள்ளிகள்)

*03)* 1. பிரமச்சாரிய, வானப்பிரஸ்த, சந்நியாச நிலையிலுள்ளோருக்கு உதவுதல்
இறைவனை வணங்குதல், விருந்தினரை உபசரித்தல், பிதிர் வழிபாடு
தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல்தலை"
2. திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை
3. 'செவ்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பின் நல்விருந்து வானத்தவர்க்கு'
"விருந்து புறத்தாற் தானுண்டல்சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று"
4. அன்ன சத்திரங்கள், மடங்கள் என்பன அமைத்து அன்னதானம் வழங்கல்.
(1 + 2 + 3 + 2 = 8 புள்ளிகள்)

*04)* 1. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாகும்" என நாவலர் பெருமான் கூறுகின்றார்.
2. மனம், வாக்கு, காயம்

3. சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதிகண்ட சோழன்.

4. * நல்ல எண்ணங்களை உள்ளத்தில் ஏற்படுத்தல் பொய், பொறாமை, கோபம், பேராசை
   * முதலியவற்றை நீக்குதல்
   * நாம ஜெபம் செய்தல்
   * திருமுறைகளை ஓதுதல்
   * நல்ல நூல்களை வாசித்தல்
   * இறைசிந்தனை, தியானம் என்பவற்றில் ஈடுபடல்

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

05) 1. பொது நூல் - வேதங்கள்
சிறப்பு நூல் - ஆகமங்கள்

2. பதி, பசு, பாசம்

3. மூன்று வகைப்படும் ஆகாமியம், பிராரத்துவம், சஞ்சிதம்

4. ஆன்மாவிற்கு நல்லுணர்வு வராமல் அதன் அறிவைத்தடுத்தல்.
ஆசை, கோபம், மயக்கம் முதலிய தீய குணங்களை ஏற்படுத்தல்
நானே பெரியவன் என்ற மமகாரத்தையும் உண்டாக்கும்
ஆணவமானது தன்னையும் காட்டாது பிற பொருட்களையும் காட்டாது இதனால் இருளிலும் கொடியது.

(1 + 2 + 2 + 3 = 8 புள்ளிகள்)

06) 1. மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடல்.

2. வார விரதம்,
பட்சவிரதம்
நட்சத்திரவிரதம்
வருடவிரதம்

3. தைப் பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி

4. சிவன் - திருவாதிரை
திருமால் - திருகோணம்
அம்பிகை - பூரம்

(2 + 2 + 2 + 2 = 8 புள்ளிகள்)

07) பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக.

(4 + 4 = 8 புள்ளிகள்)